# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2048 ● ஆகஸ்ட் 26, 2017 Weekly E-paper ● August 26, 2017


## ஏ... தாழ்ந்த தமிழகமே!




● சுப.வீரபாண்டியன்

பழங்காலத்தில் வெளிவந்த தமிழ்த் திரைப்படங்கள் குறித்துப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்,

"பரமசிவன் அருள்புரிய வந்துவந்து போவார்

பதிவிரதைக்கு இன்னல்வரும் பழையபடி தீரும்"

என்று கேலியாக எழுதுவார். இன்று தமிழ்நாட்டின் அரசியல் நிலை அப்படித்தான் இருக்கிறது. தமிழகத்தின் ஆளுநர், ஆளுங்கட்சிக்கு அருள்புரிய அவ்வப்போது வந்து வந்து போகின்றார். ஓ.பி.எஸ் – ஈ.பி.எஸ் ஆகிய பதிவிரதைகளுக்கு அவ்வப்போது இன்னல் வருகிறது. பழையபடி தீர்கிறது!

ஒருவரைப் பார்த்து ஒருவர் 420 என்று தீட்டித் தீர்த்துக் கொள்கிறார்கள். இது ஊழல் ஆட்சி என்கின்றனர். மறுநாளே இது அம்மாவின் ஆட்சி என்று கூறுகின்றனர். (இரண்டும் ஒன்றுதான் என அவர்களுக்குத் தெரியும்தானே!)

சட்டமன்ற உறுப்பினர்கள் சுற்றுலா விடுதிகளில் வெளியூர்களில் தங்க வைக்கப்படுகின்றனர். அன்றாடம் ஒரு சட்டமன்ற உறுப்பினராவது அணி மாறுகிறார். பெரும்பான்மையை இழந்து ஆட்சி இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் சட்டமன்றத்தைக் கூட்டுங்கள் என்று எதிர்க்கட்சிகள் எழுப்பும் கோரிக்கை எவர் காதிலும் விழுவதில்லை.

முதலமைச்சர் மீது நம்பிக்கையில்லை என்று ஆளுநரிடம் சொன்னதற்காக, 19 சட்டமன்ற உறுப்பினர்களைத் தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என்கிறார் ஆளுங்கட்சிக் கொறடா. அவர் பொழுது போகாத நேரத்தில் சட்டமன்ற விதிகளை ஒருமுறை படித்தால் நல்லது.

இத்தனை குழப்பங்கள் நாட்டில் நடந்து கொண்டுள்ளன. தமிழகம் தாழ்ந்து தாழ்ந்து போய்க் கொண்டிருக்கிறது. ஆனால் நம் பிரதமர் மோடி சொல்கிறார், "தமிழகம் சரியான பாதையில் போய்க் கொண்டிருக்கிறது. இனிமேல் தமிழகம் வளர்ச்சியின் உச்சத்தை எட்டும்."

ஐயோ, இதற்கு மேலும் வேறு உச்சம் இருக்கிறதா?

## வருக பேரறிவாளனே வருக!



● சுபவீ

ராஜீவ் கொலை வழக்கில் கைதாகி, 26 ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறையில் வாடுவோரில் ஒருவரான பேரறிவாளனுக்கு முதல் முறையாக ஒரு விடுப்பு (பரோல்), ஒருமாத காலத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இளமையின் வசந்தங்கள் எல்லாம் சிறையில் எரிந்து போனதற்குப் பிறகு, இப்போதுதான் அவர் பரோலில் வெளிவருகின்றார்.

அவர்களின் வாக்குமூலம் தவறாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று தன் மனசாட்சி உறுத்தலால், அதனைப் பதிவு செய்த காவல் உயர் அதிகாரியே சொன்னபிறகு, விடுதலையே அளித்திருக்க வேண்டும். ஆனால் இப்போதுதான் சிறு விடுப்பாவது கிடைத்துள்ளது.

அவரை நேரில் சென்று பார்க்க அனைவரையும் போல நம் உள்ளமும் அவாவுகின்றது. எனினும் பிரிந்த தன் குடும்பத்தினரோடு அவர் சில நாள்களாவது சேர்ந்து இருக்கட்டும். 10, 15 நாள்களுக்குப் பிறகு நாமெல்லாம் சென்று அவரைச் சந்திக்கலாம். அதுவரையில் காத்திருங்கள் தோழர்களே!


செவ்வாய்க்கிழமை முதல்

**விற்பனை தொடக்கம்!**

➔ பேரவையின் வெளியீடுகள்

➔ தோழர் சுபவீயின் நூல்கள்

அனைத்தும்

**கருஞ்சட்டைத் தமிழர் அலுவலகத்தில்**

விற்பனைக்கு வருகின்றன!

29.08.2017 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு விற்பனை தொடக்கம்!!

அனைவரும் வருக! பயன் பெறுக!

122/130 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை – 600 024

☎ 044-4204 7162

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

நிர்வாக ஆசிரியர்கள்
**சிற்பி செல்வராஜ்**
**கி.செந்தில்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keertru.com**

சுபவீ வலைப்பூ
**www.subavee.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

## ● நாமக்கல் கருத்தரங்கம்



**நா**மக்கல்லில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் 5.8.2017 அன்று நாமக்கல் கவின் கிசோர் மண்டபத்தில் கருத்தரங்கம் நடைபெற்றது. நாமக்கல் மாவட்டப் பேரவை அமைப்பாளர் சிறீதரன் தலைமையேற்க தோழர் சுந்தரவதனம் வரவேற்புரையாற்றினார். தோழர்கள் புலேந்திரன், தமிழ்க் குமரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தோழர்கள் சாமிநாதன், வை.நடராசன், வை.பெரியசாமி, வைரவேல், மணிமாறன், பார் இளங்கோவன், சிற்பி செல்வராஜ் ஆகியோர் உரையாற்றியதைத் தொடர்ந்து எழுத்தாளர் வே.மதிமாறன் **'தமிழர்க்குத் தேவை பெரியாரின் நெருப்பாற்றலே'** என்ற தலைப்பில் பல்வேறு கருத்துகளை எடுத்துக் கூறிச் சிறப்புரையாற்றினார். தமிழரசு நன்றியுரையாற்றினார்.

## ● தாம்பரத்தில் குறுந்தகடு வெளியீடு



**ஏ.**வி. கிரியின் சொல் கேளான் கவிதை குறுந்தகடு வெளியீட்டு விழாவில் சிலம்பொலியார், சுப.வீரபாண்டியன், வீ.கே.டி.பாலன், நக்கீரன் கோபால், இலக்கிய வீதி இனியவன் ஆகியோர்.

## ● கண்டன மாநாடு





**25.8.2017** அன்று சென்னை பெரியார் திடலில் நடைபெற்ற மாநில அதிகார மீட்பு, இந்தி-சமஸ்கிருதத் திணிப்புக் கண்டன மாநாட்டில் தளபதி ஸ்டாலின், ஆசிரியர் வீரமணி, தா.பாண்டியன், சுப.வீரபாண்டியன், தொல்.திருமாவளவன் ஆகியோர்.

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## எதைக் காக்கப்போகிறது ஆதார்?




**ஒ**ரு நாட்டின் அரசு, அந்நாட்டு குடிமக்களுக்குக் குடியுரிமை அடையாள அட்டை வழங்குகிறது என்றால் அது ஏற்புடையது.

மாறாக, இந்த அட்டை குடியுரிமைக்கான அடையாள அட்டை இல்லை என்று சொல்லிக்கொண்டு, ரேசன் கடை முதல் சுடுகாடு வரை இந்த அட்டைதான் கட்டாயம் என்று ஆதார் அட்டையைத் திணிப்பது எந்த வகையில் நியாயமாகும்?

ஆதார் அட்டையை அரசு திட்டங்களுக்காகத் தன்னலமாகக் கருதி கட்டாயமாக்கக் கூடாது என்று முன்னர் உச்ச நீதிமன்றம் கூறியிருந்தது.

அண்மையில் உச்ச நீதிமன்றம் தனி நபர் இரகசியம் அடிப்படை உரிமை. அதை மறுக்கும் வகையில் ஆதார் இருக்கக் கூடாது எனத் தீர்ப்பளித்தது.

கைரேகை முதல் கருவிழி வரை விஞ்ஞான அடிப்படையில் பதிவு செய்து, தனிமனித உரிமையில் தலையிட்டு மனித உரிமையை மீறியிருக்கிறது பா.ஜ.க.வின் மத்திய அரசு, இந்த ஆதார் அட்டையின் மூலம்.

மத்திய அரசின் ஆதார் நெருக்கடியைப் பயன்படுத்தித் தனியார் கைபேசி நிறுவனங்கள் தங்கள் வாடிக்கையாளர்களை ஆதார் எண்களை இணைக்க வற்புறுத்தி வருகின்றன.

தனிப்பட்ட ஒருவரின் இரகசியத்தை அரசாங்கமே அறிந்துகொள்ள உரிமையில்லாத போது, தனியார் நிறுவனங்களுக்கு இந்த அத்து மீறிய உரிமை எப்படி வந்தது?

மத்திய அரசு வழங்கறிஞர் சொல்கிறார் நீதிமன்றத்தில், கள்ளப்பணத்தை கட்டுப்படுத்திக் கண்டுபிடிக்கவும், பெரும் அளவிலான வருமான வரி ஏய்ப்பைக் கண்டுபிடிக்கவும் ஆதார் உதவுகிறது என்று.

தினக்கூலிகள், அன்றாடம் காய்ச்சிகள் என்று மக்கள் தொகையில் அதிகமாக வாழும் அடித்தட்டு மக்களிடம் இருக்கும் கருப்புப் பணம், வருமான ஏய்ப்புகளைக் கண்டுபிடிக்க இந்த ஆதார் பயன்படும் என்கிறாரா வழக்கறிஞர்?

எரிவாயுவில் ஆதார் எண்ணை இணைத்தால் மானிய விலையை வங்கியில் போடுவோம் என்றார் மோடி.

ஆதார் எண்ணை ரேசன் அட்டையில் இணைக்கச் சொன்னார் அதே மோடி. இரண்டையுமே இழுத்து முடும் நிலைக்கு வந்து விட்டது மத்திய அரசு.

இப்படித் தனிநபர் இரகசியங்களை, அவர்களின் அடிப்படை உரிமைகளைக் காலில் போட்டு மிதித்துவிட்டு, மக்கள் நலத் திட்டங்களை ஆதார் அட்டையின் மூலம் மூடுவிழா நடத்திக் கொண்டிருக்கும் மக்கள் விரோத மோடி அரசுக்கு இந்தத் தீர்ப்பு ஒரு தடை, பின்னடைவு.

இதில் எல்லாத் திட்டங்களிலும் ஆதார் அட்டையை இணைக்கும் பா.ஜ.க. அரசு, வாக்காளர் பட்டியலில் ஏன் அதை இணைக்கச் சொல்லவில்லை.

தனிமனித இரகசியம் என்றால் என்ன? அதுகுறித்து நீதிமன்றம் விளங்கச் சொல்லவில்லை.

துள்ளுக்குட்டியின் ஒரு கவிதை இப்படிச் சொல்கிறது-

''காப்பதற்கு ஏதுமற்ற பின்பு
ரகசியம் உரிமையாகி
எதைகாக்கப் போகிறது? - ஆதார்!''

தீர்ப்பு வரவேற்கத் தக்கது! ஆனால் தெளிவாக இல்லை!

## பேரவையின்
# பொதுக்குழுத் தீர்மானங்கள்!

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் 8ஆவது பொதுக்குழு, 20.08.2017 காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை, சென்னை, கொளத்தூரில், பேரவையின் துணைத்தலைவர் அ.இல. சிந்தா தலைமையில், பொதுச்செயலாளர் சுபவீ முன்னிலையில் நடைபெற்றது. மாநிலப் பொறுப்பாளர்களும், அணிகளின் பொறுப்பாளர்களும், 13 மாவட்டங்களைச் சேர்ந்த தோழர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1 கீழடி அகழ்வாய்வை நிறுத்தி வைத்திருக்கும் மத்திய அரசின் போக்கைக் கண்டித்து, 10.09.2017 காலை 11 மணிக்கு, மதுரையில், தோழர் சுபவீ தலைமையில் பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

2 பேரவையின் மூன்றாவது மாநில மாநாட்டை, விரைவில் திண்டுக்கல் மாவட்டத்தில் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

3 மாவட்டம்தோறும் ஆர்வமுள்ள இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து, மண்டல வாரியாக அவர்களுக்குத் திராவிட இயக்க வரலாறு, கோட்பாடுகள், அதன் இன்றையத் தேவைகள் குறித்துத் தொடர் பயிற்சி வகுப்புகள் நடத்துவதென்று முடிவெடுக்கப்பட்டது.

4 பேரவையின் புதிய கிளைகளான கரூர், நாமக்கல், மணப்பாறை ஆகியனவற்றில் இணைந்துள்ள தோழர்களை வரவேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தோழர் எட்வின் தமைமை நிலையச் செயலாளராகவும், தோழர் ஜெயம்பெருமாள் தெற்கு மண்டலச் செயலாளராகவும் நியமிக்கப்பட்டனர். மதுரை மாவட்டம், மாநகர், புறநகர் என்று பிரிக்கப்பட்டு, இரண்டு மாவட்டங்களுக்கான பொறுப்பாளர்களும், வேலூர் மாவட்டப் பொறுப்பாளர்களும், மணப்பாறை உள்ளிட்ட புதிய கிளைகளுக்கான பொறுப்பாளர்களும் நியமிக்கப்பட்டனர்.






# ஆன்மிகத்தின் பெயரால்...

● **இனியன்**



ஒரு மதம் சார்ந்த மடத்தின் தலைவருக்கு, அவர் செய்த குற்றத்திற்காகத் தண்டனை கொடுக்கப்பட்டதை எதிர்த்து, இன்று ஹரியானாவும், பஞ்சாபும் பற்றி எரிந்து கொண்டிருக்கின்றன.

தமிழகத்திலும், ஜெயலலிதா நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டபோது இப்படி ஒரு வன்முறை நடந்தேறியது. இங்கு அரசியலின் பெயரால் நடந்தது, அங்கு ஆன்மிகத்தின் பெயரால் நடக்கிறது.

ஹரியானா மாநிலம் சிர்சா என்னுமிடத்தில் உள்ள தேரா சச்சா சவுதா என்னும் அமைப்பின் தலைவர் குர்மித் ராம் ரஹீம் சிங் பாலியல் வழக்கில் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டுள்ளார். அதனை எதிர்த்து அங்கு தொடங்கியுள்ள கலவரத்தில் இன்றுவரை 30க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 200க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். நூற்றுக்கணக்கான ஊர்திகள் எரிக்கப்பட்டுள்ளன.

குற்றம் செய்தவர் நிம்மதியாகச்சிறையில் உள்ளார். அவருக்கான தண்டனைக் காலம் எவ்வளவு என்பதையே 28ஆம் தேதிதான் நீதிமன்றம் சொல்ல இருக்கிறது. அதற்குள் குற்றம் செய்யாத அப்பாவி மக்கள் நூற்றுக்கணக்கில் கொல்லப்படுகின்றனர். இதுதான் 'பாருக்குள்ளே சிறந்த பாரத நாட்டின்' இன்றைய நிலை.

ஆன்மிகத்தின் பெயரால், இந்தியாவில் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். எல்லாவற்றையும் துறந்துவிட்டேன் என்று சொல்லிவிட்டு, பெண்களைப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கலாம். எங்களுக்கு எதற்குப் பணம் என்று கேட்டுவிட்டு, லட்சம் கோடி ரூபாய்க்கு வணிகம் செய்யலாம். பற்றற்றவர்கள் என்று உலகிற்கு அறிவித்துவிட்டு, ஆசிரமங்களில் சுகபோக வாழ்வு நடத்தலாம்.

பாஜக ஆட்சி நடத்தும் மாநிலத்தில் ஆசிரமம் வைத்துள்ள, அரசின் இசட் பிளஸ் பாதுகாப்பு பெற்றுள்ள, பாஜக ஆதரவு சாமியார் அவர் என்பதை இந்த இடத்தில் நாம் நினைவில் கொள்ளவேண்டியுள்ளது.

**மறக்க முடியுமா?**

# பேராசிரியர் ச.வையாபுரிப்பிள்ளை



● எழில்.இளங்கோவன்

தமிழ் மொழிப் புலமையாளர், ஆய்வாளர், ஆய்வுக்கட்டுரையாளர், திறனாய்வாளர், மொழிபெயர்ப்பாளர், சொற்பொழிவாளர், வழக்கறிஞர், கதையாசிரியர், கவிஞர் போன்ற பன்முகப் பெருமைகளுக்கு உரியவர் பேராசிரியர் ச.வையாபுரிப்பிள்ளை அவர்கள்.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த இவரின் சொந்த ஊர் சிக்கநர சையன் பேட்டை. இவரின் தாயார் பாப்பம்மாள். தந்தை சரவணபெருமாள். 1891ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 12ஆம் நாள் இவர் பிறந்தார்.

பாளையங்கோட்டைப் புனித சவேரிய பள்ளியில் இவரின் தொடக்கநிலைக் கல்வி. பின்னர் திருநெல்வேலி இந்து கல்லூரியிலும், சென்னைக் கிருத்துவக் கல்லூரியிலும் பயின்றார்.

கிருத்துவக் கல்லூரியில் தமிழில் மாநில முதல் மாணவனாக அதிக மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்றமைக்காக இவர் 'சேதுபதி தங்க விருது' பெற்றார்.

இளமைக்காலத்தில் இவர் பல இலக்கிய, ஆய்வுக் கட்டுரைகளை எழுதியிருக்கிறார். இதுவே இவரை தமிழுலகிற்கு அறிமுகம் செய்த நிகழ்வாகும்.

1926ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகம் உருவாக்கி வந்த 'தமிழ்ப் பேரகராதி' ஆய்வுக்குழுத் தலைவராகவும், அதன் பொறுப்பாளராகவும் இவர் பொறுப்பேற்றார்.

உலக மொழிகளின் பேரகராதியாக உலகப் புகழ் பெற்ற அகராதி 'ஆக்ஸ்போர்டு பேரகராதி'.

பேராசிரியர் மர்ரே தலைமையில் பெரும் ஆய்வுக்குழு இதைத் தொகுத்தது.

1857ஆம் ஆண்டு தொடங்கிய இப்பணி 1928இல் 10 தொகுதிகளாக வெளிவந்தன.

அதன் இரண்டாம் கட்டப் பணியில் 1928இல் தொடங்கி 1933இல் 12 தொகுதிகளாக வெளிவந்தன.

இந்தப் பேரகராதிக்கு இணையாகத் தெற்காசிய மொழிகளுள் மிகச் சிறந்ததாகப் பேசப்படும் அகராதி, சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட தமிழ்ப் பேரகராதிதான்.

7 தொகுதிகள், 4,351 பக்கங்கள் 1,17,764 சொற்களைக் கொண்டு தமிழ் – தமிழ் – ஆங்கிலம் என்ற வடிவில் இப்பேரகராதி தொகுக்கப்பட்டுள்ளது.

1926 தொடக்கம் 1939ஆம் ஆண்டு வரை தயாரிக்கப் பெற்ற இப் பேரகராதிக்காகத் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், இடைக்கால இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், பிற்கால இலக்கியங்கள், வானியல், சோதிடம், கணிதம், சித்த மருத்துவம் போன்ற நூல்கள் ஓலைச்சுவடிகள் இவைபோன்று பல்வேறு நூல்கள் பயன்படுத்தப்பட்டு இருக்கின்றன.

பேராசிரியர் வையாபுரியின் அரும்பெரும் பணிகளுள் இப்பணியைத் தமிழுலகம் மறக்காது.

அதுபோல, திருவிதாங்கூர் பல்கலைக் கழகத்தில் 4 ஆண்டுகள் தமிழ் துறைத் தலைவராக இருந்தபோது இவர் 'மலையாள மொழிச் சொற்களஞ்சியம்' ஒன்றை அதன் உறுப்பினராக இருந்து பதிப்பித்துள்ளார்.

1936ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சித் துறை தலைவராகப் பொறுப்பேற்றார்.

இவரின் பணியில் குறிப்பிடத்தக்கது பதிப்புப் பணி. இதோ பட்டியல் –

மனோன்மணியம் (1922), துகில்விடு தூது (1929), நாமதீப நிகண்டு (1930), அரும்பொருள் விளக்க நிகண்டு (1931), களவியற் காரிகை (1931), கம்பராமாயணம், யுத்த காண்டம் – படலம் 1,3 (1932), குறுகூர் பள்ளு (1932), திருக்குருங்குடி அழகிய நம்பி உலா (1932), தினகர வெண்பா (1932), நெல்விடு தூது (1933), தொல்காப்பியம், பொருளதிகாரம் – இளம்பூரணம் (1933), திருமந்திரம் (1933), திருமுருகாற்றுப்படை (1933), கம்பராமாயணம், பால காண்டம் – படலம் 1,7 (1933), பூகோள விலாசம் (1933), மூப்பந்தொட்டி உலா (1934), தொல்காப்பியம், பொருளதிகாரம் – நச்சினார்க்கினியம் (1934), இராமலிங்கேசர் மீது பணவிடு தூது (1934), மதுரைக்கோவை (1934), தெய்வச்சிலையார் விரல்விடு தூது (1936), புறத்திரட்டு (1938), கயாதரம் (1939), சங்க இலக்கியப் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் (1940), சீவகசிந்தாமணி (1941), சாத்தூர் நொண்டி நாடகம் (1941), நவநீதப் பாட்டியல் (1943), திருமுருகாற்றுப் படை, பழைய உரை (1943), நான்மணிக்கடிகை (1944), திரிகடுகமும் சிறுபஞ்ச மூலமும் (1944), இன்னா நாற்பது (1949), இனியவை நாற்பது (1949), இராமபையன் அம்மானை (1950), முதலாயிரம் (1955), திருவாய் மொழி, கொண்டல் விடுதூது.

பேராசிரியர் வையாபுரியார் ஆராய்ச்சி உரைத் தொகுப்பு – சிறுகதை மஞ்சரி – இலக்கியச் சிந்தனைகள் – தமிழர் பண்பாடு – கம்பன் ஆராய்ச்சி – உரை மணிமாலை – இலக்கிய தீபம் – இலக்கிய உதயம் – இலக்கிய மணி மாலை – கம்பன் காவியம் – சொற்கலை விருந்து – காவியக் காலம் – இலக்கிய விளக்கம் – அகராதி நினைவுகள் – தமிழின் மறுமலர்ச்சி – திராவிட மொழிகளின் ஆராய்ச்சி – Research in Dravidian Language போன்ற நூல்களை 1930 தொடக்கம் 1960ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலங்களில் எழுதியிருக்கிறார்.

நூலாசிரியர், பதிப்பாசிரியர் என்ற இரு நிலைகளில் இவர் ஆற்றிய பணிகள் அளப்பரியன.

தஞ்சைப் பல்கலைக் கழகத்தின் முன்னால் துணை வேந்தர் வ.ஐ.சுப்பிரமணியன் வையாபுரியாரின் ஆய்வு மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கம்பனின் கவிநயத்தில் சொக்கிப்போன வையாபுரியார், டி.கே.சி.உடன் இணைந்து திருநெல்வேலியில் கம்பன் கழகத்தை உருவாக்கினார்.

ஆனால் கம்பராமாயணத்திற்கு உரை எழுத வேண்டும் என்ற இவரின் எண்ணம் இறுதி வரை நிறைவேறாமலே போய்விட்டது.

செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார் அரசியலில் வெறுப்புற்று ஒதுங்கிய கடைசிக் காலத்தில் தொல்காப்பிய இளம்பூரணாருடைய உரையை ஏடுகளில் இருந்து படியெடுத்தார். அதை வையாபுரியாரிடம் கொடுத்துச் செப்பம் செய்து பதிப்பிட வேண்டினார்.

வ.உ.சி. அவர்கள் தன்னுடன் பதிப்பாசிரியாராக இருக்க வேண்டும் என்று சொன்ன வையாபுரியாரிடம், "நீங்களே பதிப்பாசிரியராக இருங்கள்" என்று சொல்லிச் சென்றுள்ளார் வ.உ.சி. இதை அவரே தன் நூலில் நினைவு கூர்ந்திருக்கிறார்.

பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்திரனாரைப் போலத் தமிழ் இலக்கியங்கள், சங்ககாலம் போன்றவைகளின் காலக் கணிப்பில் ஏனைய அறிஞர்களுடன் பெரிதும் முரண்பட்டவர் வையாபுரியார்.

கி.மு.வைச் சேர்ந்த சங்க இலக்கியங்களைக் கி.பி.யைச் சேர்ந்தவை என்று வாதிட்டார். மூன்று தமிழ்ச் சங்கங்களின் காலம், அதன் புலவர்கள், மன்னர்களைக் கேள்விக்கு உள்ளாக்கினார்.

இவரைப் பாவாணர் கடுமையாக மறுத்தார். திராவிட இயக்கங்கள் கண்டித்தன. ஆனாலும் அறிஞர்களின் ஆய்வு முரண், அடுத்த ஆய்வுக்குப் படி அல்லவா!

தன்னிடமிருந்த 2494 நூல்கள், தமிழ், ஆங்கிலம், பிரஞ்சு, ஜெர்மன், மலையாளம் போன்ற மொழிகளிலான ஏராளமான ஆய்வுக் குறிப்புகள், ஓலைச்சுவடிகள் எல்லாவற்றையும் கல்கத்தா தேசிய நூலகத்திற்கு நன்கொடையாக கொடுத்த தமிழறிஞர் பேராசிரியர் ச.வையாபுரிபிள்ளை –

1956 பிப்ரவரி 17ஆம் நாள் தன் 65ஆம் வயதில் மரணத்தைத் தழுவிக் கொண்டார்.

●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.